உ

# வானரமதுரைத் தலபுராண வசனம்



வ. த. சுப்பிரமணிய பிள்ளை.

O23:38-21196
N34
58922

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

வானர மதுரை

# ஸ்தலபுராண வசனம்.

இது

ஷியூர் டிஸ்ட்ரிக்ட்டு முன்சீபு


## வ. த. சுப்பிரமணிய பிள்ளை

அவர்கள்


எழுதியது


சென்னபட்டணம்

கேசரி அச்சுக்கூடத்திற்

பதிப்பித்தது.

இரண்டாம் பதிப்பு.

பவஹூ சித்திரைமீ

April, 1934.

58927

Q23:38.21196.mm
N34

சிவமயம்.

# முதற் பதிப்பின்

# முகவுரை

மானாமதுரை எனத் திரிந்து வழங்கும் வானர மதுரை என்னும் ஸ்தலம் மதுரைக்குக் கிழக்கே மூன்று காத தூரத்தில், இராமேசுரம் போகும் வழியில், வைகையாற்றின் மேற்கரையி லிருக்கிறது. இது புராதனமான ஸ்தலம். இதற்கு சம்ஸ்கிருதத்திலும், தமிழிலும் புராண மிருக்கின்றது. தமிழ்ப் புராணஞ் செய்தவர் மதுரையிலிருந்த தெய்வசிகாமணி பிள்ளை குமாரர் சுப்பிரமணிய பிள்ளை. இவர் காளையார்கோயிலிற் கோபுரங் கட்டி இரதஞ் செய்வித்த மருதுபாண்டியன் காலத்தி லிருந்தவர். அந்தப் பாண்டியன் சொற்படியே வானர மதுரை ஸ்தலபுராணத்தைப் பாடினதாக மேற்படி புராணத்தின் அடியில் வருஞ் செய்யுளால் வெளியாகிறது:

**எண்சீர்க் கழிநெடிலடி விருத்தம்**

அடையலர்கே சரிசெல்வங் கல்வி யுள்ளோன்
அருட்காளை தனிற்றேர்கோ புரங்கள் செய்தோன்
உடையார்வேள் சுதன்விசுவை மருது பூபன்
உவப்பொடுவா னரவீர மதுரைத் தொன்னூல்
வடமொழியைத் தென்மொழியால் வழங்கு கென்ன
மதுரைநகர்த் தெய்வசிகா மணிதா னீன்ற
குடமுனியை நிகரான கல்வி கேள்வி
குலவியசுப் பிரமணியன் கூறி னானே.

ஆகவே, தமிழ்ப் புராணம் பாடி இப்போது சற்றேறக்குறைய நூற்றிருபது வருஷங்க ளாகின்றன. இப்புராணத்தை அச்சிடத் துணிவோர் தற்காலம் ஒருவரையுங் காணேம். அக்காலம் வரும்வரையில் பத்திமான்கள் அனைவருக்கும் உபயோகமாம்பொருட்டு இது * கத்திய ரூபமாகச் செய்யப்பட்டது. முதனூலாகிய சம்ஸ்கிருத புராணத்தை அநுசரித்தே இந்நூல் செய்யப்பட்டது. இதற்கு எனக்கு முக்கிய வுதவி புரிந்தவர் வானரமதுரையி லிருக்கும் கோர்ட்டு அமீனு பிரமஸ்ரீ - குருசாமி சாஸ்திரியார். இவர் சம்ஸ்கிருத புராணத்தைப் படித்துத் தமிழில் வியாக்கியானம் பண்ண அதன்படி இவ்வசனம் எழுதப்பட்டது. இவர் செய்த பேருபகாரமும் பெரும்புண்ணியமும் என்றும் நினைக்கத்தக்கவை. புராணத்தில் ஆங்காங்கு வரும் ஸம்ஸ்கிருத ஸ்தோத்திர சுலோகங்கள் மிகு நயமாயிருப்பதால் அவைகளை விட மனம் வாராமல் அநுபந்தமாகப் புத்தகத்தின் இறுதியிற் சேர்த்திருக்கின்றேன்.

இந்நூலில் என்ன குற்றங்கள் இருந்தபோதிலும் தெரிந்த பெரியோர்கள் அவைகளைப் பொறுத்துப் பொருளையே கொள்ளுவார்களெனப் பிரார்த்திக்கின்றேன்.

வானர மதுரை:<br>பிலவஙூ ஐப்பசிமீ<br>1901. } வ. த. சுப்பிரமணிய பிள்ளை.

---

* கத்தியரூபம் = வசனநடை

உ

திருத்தணிகேசன் திருவடி துணை.

# இரண்டாம் பதிப்பின்

# முகவுரை.

முப்பத்துமூன்று வருடங்களுக்கு முன் எமது தந்தையார் அச்சிட்ட இந் நூலின் இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளிவரலாயிற்று. இதற்குப் பென்ஷன் அமீனு, ம-ா-ா-ஸ்ரீ, கு. ராமசாமி பிள்ளையவர்கள் மிக ஊக்கங் கொண்டிருந்தனர். இப்பால், மதுரையில் ராமநாதபுரம் ஜில்லா ரிஜிஸ்தராராக இப்பொழுதிருக்கும் எமது நண்பர் திருவாளர் ம. தங்கவேலு முதலியாரவர்களின் நன்முயற்சியே முக்கிய காரணமாயிற்று. இங்ஙனம் எம்மைத் தூண்டினது ஸ்ரீ ஆநந்தவல்லி சமேத ஸ்ரீ சோமநாத ஸ்வாமியின் திருவருளே.

திருவையாறு
12-4-1934.

வ. சு. சண்முகம்.

சென்னை
23-4-1934

வ. சு. செங்கல்வராயன்.

58927

Q23:38.21196.mm
N34

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

# வானரமதுரைப் புராண வசனம்.

## *பாயிரம்.

### விநாயகர்.

ஒருகொம்ப னிருமதத்தன் முக்கண்ண னல்வாய
னொளிரும் பூவின்
மருவுகர மைந்துடையன் சண்முகன்தாய் தந்தைமுனம்
வந்து தோன்றும்
பெருமையன்செஞ் சடையணிந்தோ னடியவர்கள்பிறவியெனும்
பிணியை நீங்க
அருளுதவுங் கற்பகப்பேர்க் கணபதிதா ளன்பினொடும்
அகத்துள் வைப்பாம். (க)

### சுந்தரேஸ்வரர்

மாமேவு மணிமார்ப னுலகமெல்லாங் காத்திடவும்
வனச வாசப்
பூமேவு நான்முகத்தோன் படைப்பவுந்தன் சத்திவைத்த
புநித மூர்த்தி
தேமேவு கொன்றையணி செஞ்சடையோ னன்பருக்கு
நலமே செய்யுங்
கோமானங் கயற்கண்ணி பங்கனிரு பதந்தலைமேற்
கொள்ளு வாமே. (உ)

---

* இப்பாயிரச் செய்யுள்கள் தமிழ்ப் புராணத்திலிருந்து எடுத்து அச்சிடப்பட்டன.

## உமாதேவியார்.

முழுமதிய மொருகோடி யொளிர்வதென வொளிருமலர்
முகத்தி னளை
அழகுபெறு மிரண்டுகய விகலிமலைந் தாலன்ன
அருட்கண் ணளைப்
பழமறையின் முடிமேலும் பத்தர்மனத் தினும்வைகும்
பதத்தி னளை
மழவிடையோன் பங்கிலுறை யுமையவளை நிதம்போற்றி
வணங்கல் செய்வாம். (௩)

## சோமநாதர்.

மாமறையின் முடிமீதிற் பேரறிவே வடிவாகி
மன்னி னனை
நாமகள்கா தலன்முதல ஐவகைய கருத்தர்களாய்
நண்ணி னனைத்
தாமரையுங் கயிரவமுஞ் சங்கினமு மன்னமுஞ்சேர்
தடங்கள் சூழுஞ்
சோமபுரி யதனிலுறை சோமநா தனைநிதமுந்
தொழுதல் செய்வாம். (௪)

## ஆநந்தவல்லி.

பானந்து திகழ்கரத்தான் வசுதேவன் தேவகிதன்
பால்வந் தாயர்
கோனந்தன் மனைவளர்ந்தோன் தங்கையையன் பருக்கருள்செய்
குணத்தி னளை
வானந்தி மதிமுடித்த சோமேசன் வலப்பாக
மகிழ்ந்து வைகும்
ஆநந்த வல்லியம்மை தன்னையெம துளக்கமல
மதனுள் வைப்பாம். (௫)

## முருகக்கடவுள்.

முருகார் மலரை யொருகோடி
வண்டு வீழ முடித்திலகும்
மருவார் கூந்தற் கொம்மைமுலைக்
குறத்தி விழியை வண்கரத்திற்
பருவேல் பொருவு மெனஇணைத்துப்
பார்த்துப் பார்த்துண் மகிழ்கூரும்
உருள்பூந் தண்டார் முருகனடி
யுள்ளத் தமைத்து வணங்குவாம். (கூ)

## ஐயனர் - வீரபத்திரர் - வைரவக்கடவுள்.

பூரணைபுட் கலைகேள்வன் திருப்பாதம் வணங்கியரன்
பொருந்தா தாற்றுஞ்
சீருடைய சிறுவிதியாந் தக்கனுயர் வேள்வியினைச்
சிதைத்த கொற்ற
வீரனது சரணமல ருளத்தகத்துஞ் சிரத்தினினு
மேவச் சேர்த்தி
மாரனுமேக் கறுமெழில்சேர் வைரவன்றன் மலர்ப்பதமும்
வணங்கல் செய்வாம். (எ)

## நந்திதேவர் - சிவகணங்கள்.

எள்ளிடவெள் ளிடமின்றி நான்முகத்தோன் முதலமரர்
கணங்க ளீண்டும்
வெள்ளிமலை தனைக்காக்கு நந்திபிரு சரணமலர்
விரும்பிப் போற்றித்
தள்ளரிய பெருந்திறல்சேர் மாகாள னுயர்மணிமான்
சண்டன் பாதம்
உள்ளமிசைக் குடியிருத்தி யேனையநற் கணங்களையும்
உன்னல் செய்வாம். (அ)

## மூவர்முதலிகள்

சமணர்களைக் கழுவேற்றும் பரசமய கோளரிதன்
 தாள்கள் போற்றி
அமலனதஞ் செழுத்தோதிக் கற்புணையாக் கடல்கடந்த
 அப்பற் போற்றிக்
குமரியளி பலகோடி கூட்டுண்ண நறவுயிர்க்குங்
 கொன்றைப் பைந்தார்
உமையவள்நா யகன்தடுத்தாட் கொளவருஞ்சுந்
 தரன் பதமும் உளத்துள் வைப்பாம். (கூ)

## திருவாதவூரடிகள்.

ஓது மையைந் தினப்புறத் துற்றிடும்
ஆதி தத்துவந் தன்னை யறிந்ததில்
ஏத மின்றி யிரண்டற நின்றிடும்
வாத வூரிறை பாத மனக்கொள்வாம். (க0)

## சண்டீசர் - வியாசர் - அகஸ்தியர் முதலியோர்

நீதிபுனை சண்டீசன் முதலாய தொண்டர்பத
 நினைந்து போற்றி
வேதநான் காய்வகுத்த வாதரா யணன்பாதம்
 விரும்பிப் போற்றி
ஏதமிலாக் கும்பமுநி பிருகுவா யுவின்பாத
 மிறைஞ்சிப் போற்றி
மாதவத்தின் துறைபோய முநிக்கணங்கள் திருப்பதமும்
 வணங்கு வோமே. (கக)

## நாமகள்.

வண்டு சூழ்ந்து முரன்றணவி
வாசந் துதைந்து விரைநறவம்
உண்டு களிகூர் வாலிதட்டா
மரைமே லிருக்கு மொண்டொடியை
அண்டர் முதலோ ரனைவோர்க்குந்
தாயா யுறையு மாயிழையைத்
தொண்ட ரகத்து நாமீதும்
உறைபா ரதியைத் தொழுதிடுவாம். (கஉ)

## வாழ்த்து.

அறுதொழிலோ ரறுதொழிலோ ராகாம னிதம்வாழ்க
ஆன்கள் வாழ்க
மறுவறுகண் டிகைமாலை நீறுபுனை சிவனடியார்
வாழ்க மேக
நிறையமழை பெய்துலகஞ் செழிக்குகவேந் தர்கள்செங்கோ
னீடு வாழ்க
அறையுமிந்நூல் கற்பாந்த மிருக்குகயா வருஞ்செல்வத்
தமர்க மாதோ.

பாயிர முற்றிற்று.

உ

கணபதிதுணை.

# வானர மதுரைப் புராண வசனம்.

## முதல் அத்தியாயம்.

முன்னொரு காலத்திற் சிவபக்த சிரோமணிகளும் தவசிரேஷ்டர்களுமாகிய சௌனகாதி முனிவர்கள் நைமிசாரணியத்திலே ஒரு யாகஞ்செய்யத் தொடங்கினார்கள். அப்பொழுது பௌராணிகோத்தமராகிய சூதமுனிவர் அங்கு வர, முனிவர்கள் அவரைவணங்கி ஆசனத்திலிருக்கச்செய்து, சிவபுராணம் சொல்லியருளும்படிக் கேட்டுக்கொண்டார்கள். சூதமுனிவர் அவர்களை நோக்கி, "முனிவர்களே! நான் சொல்லும் சிவசரித்திரத்தைக் கவனமாய்க் கேளுங்கள். அதனாற் சகல பாவமும் நிவாரணமாகும். சகல பாக்கியமும் உண்டாகும். இந்தச் சரித்திரம் ஆதியில் வாயு பகவானாற் பிருகுமகாரிஷிக்குச் சொல்லப்பட்டது. வில்வவனம் என்றொரு க்ஷேத்திர முண்டு. அது பலவித மிருகங்களாலும், மயில்குயில் முதலிய பக்ஷிகளாலும் நிறைந்துள்ளது. கிருதமாலா என்று சொல்லப்படும் வைகை நதியினுடைய ஜலப்பிரவாகத்தினாற் பரிசுத்தஞ் செய்யப்பட்டது. ஆல், அரசு, இலந்தை, சண்பகம் முதலிய விருக்ஷங்களாற் சூழப்பட்டது. கின்னரஸ்திரீகளும் கந்தருவர்களும் அங்கு கானஞ் செய்துகொண்டிருப்பார்கள். அந்த ஸ்தலத்தில், தக்ஷிண வாகினியாய்ச் செல்லும் வைகை நதியின் மேற்கரையிலே, சோமேசலிங்கம் பிரகா

சித்துக்கொண்டிருக்கின்றது. அந்த மூர்த்திக்குப் பூர்வத்தில் **திரிபாகநாதர்** என்றும், **திரிபதேசர்** என்றும் பெயர். அதற்குக் கிழக்கே சந்திரனாலுண்டாக்கப்பட்ட * **சந்திரபுஷ்கரணி** என்னும் ஒரு தீர்த்த முண்டு. சந்திரன், தனக்குத் தக்கனால் நேரிட்ட க்ஷயரோகத்தினாற் பீடிக்கப்பட்டு அந்த க்ஷேத்திரத்துக்குப்போய், திரிபதேசரை உமாதேவியாருடன் பூஜித்தபடியால் சுவாமிக்குச் **சோமநாதர்** என்னும் பெய ருண்டாயிற்று. அவன் நோய்நீங்கி ஆநந்தம் அடைந்தபடியால் உமாதேவியாருக்கு **ஆநந்தவல்லி** யென்று பெயரிட்டான்.

இனி, சந்திரனுக்குச் சாபம் நேர்ந்த காரணமும், அவன் அந்த க்ஷேத்திரத்துக்குப் போய்ச் சாபநிவாரணம் பெற்றதும் சொல்லுகிறேன்.

## இரண்டாம் அத்தியாயம்.

# சந்திரன் பூஜித்தது.

ஆதியில் விஷ்ணுமூர்த்தி தம்முடைய நாபிக்கமலத்திலிருந்து பிரமதேவரை யுண்டுபண்ணினார். பிரமதேவர் சகல லோகங்களையும், தக்கன் முதலிய பிரஜாபதிகளையும், இந்திரன் முதலிய தேவர்களையும், அசுரர்களையும் உண்டு பண்ணினார். தக்கன் அசுவினி முதலிய நக்ஷத்திரங்களைப் பெண்களாகச் சிருஷ்டித்து அவர்களைச் சந்திரனுக்கு மணம் புரிவித்தான். அவர்களில் அதிக ரூபலாவணியமுள்ள ரோகிணியிடத்திற் சந்திரன் அதிக மோகமுள்ளவனா யிருந்

* இந்தத் தீர்த்தம் இப்போது வைகை நதியினால் மூடிப் போய்விட்டது.

தான். அப்படி யிருப்பதைப்பற்றி மற்ற இருபத்தாறு பெண்களும் தங்கள் பிதாவாகிய தக்கனிடஞ் சென்று முறையிட்டார்கள். தக்கன் அதைக்கேட்டு மனமிரங்கி, சந்திரன் மேற் கோபங்கொண்டு, அவனுக்கு க்ஷயரோகம் உண்டாகும்படிச் சபித்தான். சந்திரன் அதனால் அதிக துயருற்று, அகஸ்தியரிடம் சென்று வணங்கி, 'கும்பசம்பவரே! எல்லாமுணர்ந்தவரே! கருணாநிதியே! சுப்பிரமணியக்கடவுளுடைய அநுக்கிரகம் பெற்றவரே! பரமசிவனுக் கொப்பானவரே! வாதாவி வில்வலன் என்னும் அசுரர்களைச் சங்கரித்தவரே! சர்வோபகார மூர்த்தியே! என்னுடைய ரோகம் நிவாரணமாகும் வழியை யருளிச்செய்யவேண்டும்' என்று பிரார்த்தித்தான். அகஸ்தியர் சந்திரனை நோக்கி, 'வில்வவனம்' என்னும் க்ஷேத்திரம் ஒன்றிருக்கிறது. அது தேவர்களாலும் சித்தர்களாலும் சேவிக்கப்பட்டுள்ளது. அங்கே திரிபதேசர் என்னும் பெயருடைய சிவலிங்கம் விளங்கிக்கொண்டிருக்கிறது. நீ அங்குச் சென்று அவ்விலிங்கத்தைப் பூஜித்தால், உன்சாபம் நிவர்த்தியாகும்' என்று சொன்னார். சந்திரன் உடனே வில்வவன க்ஷேத்திரத்துக்குச் சென்று அங்குள்ள காட்டையழித்துக் கோயில், விமானம், மண்டபம் முதலிய இயற்றிச் சிவலிங்கத்துக்கு விதிப்படி பீடிகையும், ஆவரண தேவதைகளையும் உண்டுபண்ணினான். அம்பிகைக்குத் தனியாக ஒரு ஆலயமும் ஏற்படுத்தினான். சுவாமி சந்நிதிக்கெதிரில் தன் பேரால் ஒரு தீர்த்தத்தை யுண்டாக்கினான். அதில் ஸ்நானஞ்செய்தவுடனே சாபம் நிவாரணமாயிற்று. சந்திரன் மகிழ்ச்சியடைந்து வைகையாற்றிலும் ஸ்நானஞ்செய்து, சுத்தவஸ்திரந்தரித்து, விபூதி ருத்திராக்ஷம் அணிந்து, ஆலயத்திற்சென்று விநாயகர், சுப்பிரமணியர் முதலிய ஆவரணதேவதைகளைப் பிரதிஷ்டை செய்து, விநாயகரைப் பூஜித்துப் பிரதக்ஷிணமாக சுவாமி சந்நிதிக்கு

வந்தான். ஆயிரத்தெட்டு கும்பங்களில் ஜலத்தைப் பூரித்து வைத்து, சத ருத்திரம் முதலிய மந்திரங்களைப் பிராமணோத் தமர்களுடனிருந்து ஜபித்து, எண்ணெய், பால், தயிர், நெய், பழரசங்கள், கருப்பஞ்சாறு, பஞ்சாமிர்தம், சந்தனம் இவைகளினால் சுவாமிக்கும் அம்பிகைக்கும் அபிஷேகஞ் செய்து, பின்பு மேற்சொன்ன கும்பஜலத்தைக் கொண்டும் தன்னுடைய அமிர்தத்தினாலும் அபிஷேகஞ்செய்தான். அப் படிச் செய்தவுடனே சிவலிங்கம் வெண்மை நிறமாயிற்று. அப்பால் சுவாமிக்குப் பீதாம்பரந்தரித்து, ஆபரணாலங்கிரு தஞ்செய்து, நீலோற்பலம் முதலிய மாலைகளை அணிவித்துத் தூபதீபங்காட்டி, ஷடுரசங்களோடுங்கூடிய நைவேத்தியங்க ளைச் சமர்ப்பித்து, தாம்பூலந்தந்து, தீபாராதனையைக் கிர மப்படி செய்து, வில்வபத்திரங்களைக்கொண்டு சகஸ்ரநாம அர்ச்சனை செய்து, பின்பு ஷண்முகமூர்த்தியையும் பூஜித் தான். அப்பால், பிரதக்ஷிணஞ்செய்து சுவாமிசந்நிதிக்கு வந்து நமஸ்காரஞ்செய்து பத்தியுடன் சித்தமுருகிப் பின் வருமாறு தோத்திரஞ்செய்தான்.—

சகல மங்களங்களுக்கும் இருப்பிடமானவரே! சந்த்ர ஜடாதரரே! காலசம்ஹாரமூர்த்தியே! கலியினுடைய கொடு மையை ஒழிப்பவரே! அநேக கோடி மன்மதருடைய அழகு பொருந்திய ரூபத்தையுடையவரே! த்ரிபதநாயக சங்கரரே! உமக்கு நமஸ்காரம். (க)

பஞ்ச முகங்களையுடையவரே! சர்ப்பங்களைக் குண்டல மாகத் தரித்தவரே! அன்று மலர்ந்த தாமரை புஷ்பங்கள் போன்ற கண்களை யுடையவரே! விஷ்ணுவானவர் தமது கண்ணையே மலராகக்கொண்டு அர்ச்சித்த பாதங்களை யுடை யவரே! த்ரிபதநாயக சங்கரரே! உமக்கு நமஸ்காரம். (உ)

கங்காதரரே! விஷ்ணுவினால் வந்திக்கப்பட்டவரே! தேவர்களுக்குச் சுகத்தைக் கொடுப்பவரே! குணசாகரரே!

பூமியை ரதமாகவும், சூரிய சந்திரர்களை அந்த ரதத்தின் சக்கிரங்களாகவும் உடையவரே! த்ரிபதநாயக சங்கரரே! உமக்கு நமஸ்காரம். (௩)

மகாமேருபர்வதத்தை வில்லாகவும், ஆதிசேஷனை அவ்வில்லுக்கு நாணாகவும், மகாவிஷ்ணுவைச் சரமாகவும் உடையவரே! சூலபாணியே! த்ரிபதநாயக சங்கரரே! உமக்கு நமஸ்காரம். (௪)

யாவராலும் சேவிக்கப்பட்டவரே! தக்கனுடைய யாகத்திற் சூரியனுடைய பற்களை நெரித்தவரே! திருப்பாற்கடலிலுண்டான ஆலகாலவிஷத்தை உண்டவரே! மந்தாரபுஷ்பங்களினால் அர்ச்சிக்கப்பட்டவரே! த்ரிபதநாயக சங்கரரே! உமக்கு நமஸ்காரம். (௫)

மகாவிஷ்ணு வராக ரூபமெடுத்துப் பூமியில் மிகுந்த தூரஞ்சென்று தேடியுங் காணாத திருவடியையும், பிரமதேவர் அன்னப்பக்ஷி வடிவெடுத்து ஆகாயத்தில் மிகுந்த தூரஞ் சென்று தேடியும் அறியப்படாத திருமுடியையும், உடையவரே! வில்வவனத்தில் மிகுந்த ஆவலோடும் வசிப்பவரே! த்ரிபதநாயக சங்கரரே! உமக்கு நமஸ்காரம். (௬)

விபூதியையே சந்தனம்போல அணிந்திருக்குந் திருமேனியை யுடையவரே! சரணம் அடைந்தவர்களுக்குக் கற்பகவிருக்ஷம் போன்றவரே! காமதகனரே! உக்ரமூர்த்தியே! சத்தியஸ்வரூபரே! சம்பத்தை யளிப்பவரே! த்ரிபதநாயக சங்கரரே! உமக்கு நமஸ்காரம். (௭)

ஜோதிஸ்வரூபரே! யானையின் தோலைத் தரித்தவரே! மகேஸ்வரரே! கந்தர்வர் முதலிய தேவதைகளால் நமஸ்கரிக்கப்பட்டவரே! சர்வேஸ்வரரே! ஆகாச கங்கை அடங்கியிருக்கும் ஜடாமகுடத்தை யுடையவரே! த்ரிபதநாயக சங்கரரே! உமக்கு நமஸ்காரம். (௮)

என்று இவ்வாறு ஸ்தோத்திரஞ்செய்து, அடிக்கடி நமஸ்கரித்து எழுந்து, கைகளைச் சிரசின்மேற் குவித்து, ஹர ஹர என்று சொல்லி, மறுபடியும் பூமியில் விழுந்து சாஷ்டாங்கமாகப் பணிந்தான். அப்போது பரமசிவன் பார்வதிதேவியாருடனே ரிஷபவாகனத்தின்மீது எழுந்தருளி வந்து, சந்திரனுக்குக் காக்ஷிகொடுத்து, 'சந்திரனே! எழுந்திரு. உனக்கு க்ஷேம முண்டாகுக. வேண்டிய வரங்களைத் தருகிறோம்; கேள்' என்ன, சந்திரன், 'ஸ்வாமீ! உம்முடைய தரிசனத்தினாலேயே தக்கனாலெனக்கு நேரிட்ட சாபம் ஒழிந்தது. ஆயினும் அடியேன் விரும்பும் வரம் ஒன்றுளது. அதாவது தேவரீருக்குச் சோமநாதர் என்றும், உம்முடைய தேவியாருக்கு ஆநந்தவல்லி என்றும் பெயர்வழங்கும்படி அநுக்கிரகஞ்செய்ய வேண்டும்' என்று பிரார்த்திக்கச்சிவபெருமான், 'அப்படியே ஆகுக' என்றருளிச்செய்து, வெகு ஆவலோடும் சந்திரனைத் தமது சிரசில் தரித்துக்கொண்டார். அப்பொழுது சகல தேவர்களும் புஷ்பமழை பெய்தார்கள். சுவாமி சந்திரனைப் பார்த்து, 'இதுமுதல் சர்வலோகங்களிலும் எம்மைச் சந்திரசேகரன் என்று சொல்லக்கடவர்கள். இந்த வில்வ வனத்தை உன் பேராற் பட்டணமாக்கி வசந்தகாலத்தில் எமக்கு உற்சவம் செய்யக்கடவாய்' என்றருளிச் செய்ய, சந்திரன் கண்களில் ஆனந்தபாஷ்பம் சொரியச் சொல்லுகிறான்: 'சகல லோக நாயகரே! தேவதேவரே! தயாநிதியே! நீர் சொல்லுகிறபடியே செய்கிறேன். திரிபதேசர் என்கிற பெயரும், திரிபாகேசர் என்கிற பெயரும்உமக்குண்டானதற்குக் காரணம் அருளிச்செய்ய வேண்டும்' என்ன, சோமநாதர் சொல்லுகிறார்: 'பூர்வகாலத்திற் பாதாள லோகத்திலிருந்து உற்பத்தியான ஒரு லிங்கம் மூன்று வடிவங்களாயிற்று. அதில் ஒரு பாகந்தான் இங்குண்டாயிருக்கும் லிங்கம். மற்றை இரண்டு பாகங்களும்

இவ்வில்வ வனத்துக்கு ஈசான திக்கிலுள்ள * தேவதாருவனத்தில் தோன்றின. வில்வ வனத்திலுண்டான இந்த லிங்கத்தை யோகிகள் முதலிய மகாத்மாக்கள் பூஜைபண்ணித் திரிபுதேசர் என்றும், திரிபாகேசர் என்றும் பேரிட்டார்கள். மற்றையிரண்டு லிங்கங்களையும் நீ போய்ப் பூஜித்துச் சகல லோகங்களையும் ரக்ஷித்துக்கொண்டிரு' என்றருளிச்செய்து சிவலிங்கத்தில் மறைந்தருளினர். பின்பு சந்திரன் விசுவகர்மாவைக் கொண்டு வில்வவனத்தைச் சகலலக்ஷணங்களும் பொருந்திய நகரமாக்கி, வசந்த ருதுவிற் சித்திரை மாதத்திற் புநர்பூச நக்ஷத்திரத்தில் துவஜாரோகணஞ் செய்து, சுவாதி நக்ஷத்திரத்தில் ரதாரோஹணமும் விசாக நக்ஷத்திரத்தில் தீர்த்தோற்சவமும் நடத்திப், பிறகு திருக்கானப்பேருக்குச் சென்று, யானை மடுவில் விதிப்படி ஸ்நானஞ்செய்து, ஆலயத்திற் சென்று விநாயகரை வணங்கி, அங்குள்ள இரண்டு லிங்கங்களில் ஒன்றுக்குச் சோமேசர் என்றும், மற்றொன்றுக்குக் காளீசர் என்றும், பெயரிட்டுப் பூஜித்துப் பின்பு சுவர்ண வல்லி என்னும் பெயருடன் விளங்கும் உமாதேவியாரையும் பூஜித்து வணங்கி விடைபெற்றுக்கொண்டு, தன்னிருப்பிடம் போய்ச்சேர்ந்தான். வில்வவன க்ஷேத்திரம் கிருதயுகத்தில் சந்திரபட்டணம் என்றும், திரேதாயுகத்தில் கீசானமதுரை (வானர மதுரை) என்றும், துவாபரயுகத்தில் ஸ்தூலகர்ணபுரி என்றும், கலியுகத்தில் வில்வவனம் என்றும், முநிசிரேஷ்டர்களாலே சொல்லப்பட்டிருக்கின்றது.

---

* தேவதாருவனம் என்பது திருக்கானப்பேராகிய காளையார்கோயில்.

## மூன்றும் அத்தியாயம்.

---

# ஸ்தூலகர்ண மகாராஜன் முத்தியடைந்தது.

**பா**ஞ்சால தேசத்திலே, கன்னியகுப்ஜம் என்னும் பட்டணத்திலே, ஸ்தூலகர்ணன் என்றொரு அரச னிருந் தான். அவன் சிவபத்தியிற் சிறந்தவன். பிதாவானவன் பிள்ளைகளைப் பாதுகாப்பதுபோலத் தன் குடிகளைக் காப் பாற்றிவந்தான். ஒருகாலத்தில் அவனுக்குத் தீர்த்த யாத்திரை செய்யவேண்டும் என்னும் எண்ணம் உண்டாக, அவன் தன் சேனைகளுடன் புறப்பட்டுப், பதரிகாஸ்ரமம் என்னும் வனத்தை யடைந்து, அங்கு வசித்துக்கொண் டிருந்த வியாச முனிவரைக்கண்டு பணிந்து துதித்து, அப் பால் ஸ்ரீகேதாரத்துக்குச் சென்று பணிந்து, பிரயாகைக்கு வந்து அங்கு ஸ்நானஞ்செய்து, பின்பு வாரணாசியாகிய காசி க்ஷேத்திரத்தை யடைந்து, கங்கையில் ஸ்நானஞ்செய்து, விசுவநாதரையும் விசாலாக்ஷி அம்மையையுந் தரிசித்து வணங்கி, கயைக்கு வந்து, அப்பாற், காஞ்சீபுரத்தை அடைந்து, அங்கு ஸ்ரீ காமாக்ஷி தேவி சமேதராய் விளங் கும் ஸ்ரீ ஏகாம்பரநாதரைத் தரிசித்து வணங்கிப், பின்பு திருவண்ணாமலை, விருத்தாசலம், சிதம்பரம், மாயூரம், திரு விடைமருதூர், சுவாமிமலை (குருசைலம்), கும்பகோணம், ஸ்ரீரங்கம் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு, மது ரையையடைந்து, பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, 'ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுரரைத் தரிசித்து வணங்கி, அப்பால், ஸ்ரீ விருக்ஷகானனம்' (வில்வவனம்) ஆகிய புண் ணியக்ஷேத்திரத்தை அடைந்தான். அங்கே வெண்மை

நிறத்தோடுங்கூடிய சுயம்புமூர்த்தியாகிய சிவலிங்கப்பெரு மானைக்கண்டு மகிழ்ந்து, நமஸ்கரித்து வணங்கிக்கொண்டிருக் கும்பொழுது, ஆகாசத்தில் ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. அது, "ஸ்தூலகர்ணராஜனே! தக்கனால் நேரிட்ட சாபம் நீங் கும்பொருட்டுச் சந்திரனால் இந்த லிங்கம் பூஜிக்கப்பட்டுள் ளது. அவன் சாபம் நீங்கிச் சுகமடைந்து, இந்த வில்வ வனத்தைப் பட்டணமாகச்செய்து, தன் இருப்பிடம்போய்ச் சேர்ந்தான். பின்பு பிரளயம் உண்டாகிப் பட்டணம் அழிந்து முன்போற் காடாய்விட்டது. நீ யிந்தக் காட்டை யழித்து மறுபடியும் பட்டணமாகச் செய்" என்று சொல்லிற்று. இவ் வாக்கியத்தைக் கேட்ட அரசன், உடனே ஆட்களைவிட் டுக் காட்டையழித்து, முன்போற் பட்டணத்தை உண்டு பண்ணினான். பரமசிவனுடைய ஆலயத்தையும் உண் டாக்கி, அதில் உற்சவ விக்கிரகம் முதலிய ஸ்தாபித்து, வைகைநதியிலும் சந்திரபுஷ்கரணியிலும் ஸ்நானஞ்செய்து, சுத்தவஸ்திரந் தரித்து, விபூதி ருத்திராக்ஷதாரணஞ் செய்து கொண்டு, முதலில் விநாயகரைப் பூஜித்துப், பின்பு சோம நாதரையும் ஆநந்தவல்லியையும் பூஜித்துச், சோமநாத ருடைய சந்நிதியில் வந்து, தண்டாகாரமாய் விழுந்து நமஸ் காரஞ்செய்தவுடனே, சோமநாதர் அவனுக்குக் காக்ஷி கொடுத்தருளினார். அரசன் ஆநந்தபரவசனாய்ச் சுவாமியை ஸ்துதி செய்யத்தொடங்கினான் :—

"தேவதேவா! மகாதேவா! சோமநாதா! தயாகரா! பரமேஸ்வரா! காமதகனா! எளியேனாகிய என்னைச் சீக்கிரம் ரக்ஷித்தருளவேண்டும். (க)

"யாகங்களுக்கு இறைவராயிருப்பவரே! தயாமூர்த் தியே! சகல துக்கங்களையும் ஒழிப்பவரே! கறுத்த கண் டத்தை யுடையவரே! சகல கலைகளுக்கும் மேற்பட்டவரே! எளியேனாகிய என்னைச் சீக்கிரம் ரக்ஷித்தருளவேண்டும் (உ)

"பிரமனுடைய சிரசைக் கொய்தவரே! விஷ்ணுவினுடைய நேத்திரத்தினல் அர்ச்சிக்கப்பட்டவரே! கோடி சூரியப்பிரகாசரே! எளியேனுகிய என்னைச் சீக்கிரம் ரக்ஷித்தருளவேண்டும். (ங)

"யானைத்தோலை உடையாக உடையவரே! ஜகந்நாதரே! குமாரக் கடவுளாற் பூஜிக்கப்பெற்றவரே! பக்த ரக்ஷகரே! கணநாதரே! எளியேனுகிய என்னைச்சீக்கிரம் ரக்ஷித்தருளவேண்டும். (ச)

"காலகாலரே! கௌரீசரே! தேவர்களாற் பூஜிக்கப்பட்டவரே! சந்திரசேகரரே! திரிபுர தகனரே! எளியேனுகிய என்னைச் சீக்கிரம் ரக்ஷித்தருளவேண்டும். (ரு)

"பிதுர்கானனமாகிய மசான பூமியில் நடிப்பவரே! காலசம்ஹார மூர்த்தியே! ஜடாதரரே! மேருவை வில்லாக வளைத்தவரே! எளியேனுகிய என்னைச் சீக்கிரம் ரக்ஷித்தருளவேண்டும். (சு)

"சோமபுர நாயகரே! அடியார்கள் விரும்பியதை அளிப்பவரே! சீதபாநுவாகிய சந்திரனுடைய கலையைச் சிரசில் தரித்தவரே! சரணமடைந்தவர்களிடத்திற் பிரியமாயிருப்பவரே! கோடி மன்மத காந்தியையுடையவரே! எளியேனுகிய என்னைச் சீக்கிரம் ரக்ஷித்தருளவேண்டும். (எ)

"சோமநாதரே! திரிபதேஸ்வரரே! வில்வாரண்யத்திலெழுந்தருளியிருப்பவரே! ஆநந்தவல்லி நாயகரே! சிவபெருமானே! நமஸ்காரம், நமஸ்காரம். சந்திர கலாதரரே." (அ)

என்று இவ்வாறு ஸ்தூலகர்ண மகாராஜன் ஸ்தோத்திரஞ்செய்து, கீழே விழுந்து பணிந்து, "ஸ்வாமீ! உம்முடைய திருவடிகளில் அடியேனுக்கு மாருத அன்பிருக்கும்படி அநுக்கிரகம் செய்யவேண்டும்" என்று பிரார்த்தித்தான். பரமசிவன் அவ்வாறே அவனுக்கு அநுக்கிரகஞ்செய்து, மகாலிங்கத்தில் மறைந்தருளினர். பின்பு ஸ்தூலகர்ணன்

58977

அங்கிருந்து இராமேச்சுரத்துக்குச் சென்று, தநுஷ்கோடியில் விதிப்படி ஸ்நானஞ்செய்துவந்து, இராமநாத மூர்த்தியையும் பர்வதவர்த்தநியம்மையையும் பூஜித்து, மறுபடி சோமநாத புரத்துக்கு வந்து, சோமேசுரரை நமஸ்கரித்து வணங்கி, அவரைத் தியானஞ்செய்து கொண்டே, தன் நகரமாகிய கன்னியகுப்ஜத்தை அடைந்து, தன் புத்திரனுக்கு அரசாக்ஷி யைக் கொடுத்துவிட்டு, மறுபடி வில்வவனத்துக்கு வந்து அங்கே அநேக நாள் சோமநாதரைப் பூஜித்துக்கொண் டிருந்து, அவருடைய அநுக்கிரகத்தால் யோகிகளாலும் அடைதற்கரிய சிவசாயுஜ்யத்தை அடைந்தான்.

இந்தச் சரித்திரத்தைப் படிப்பவர்களும் கேட்பவர்க ளும், இவ்வுலகத்திற் சகல பாக்கியங்களையும் பெற்று, இறுதி யில் மோக்ஷத்தை அடைவார்கள்.

## நான்காம் அத்தியாயம்.

# உக்கிரபாண்டியனும் பலராமரும் பூஜித்தது.

'உக்கிரபாண்டியனும், பல்ராமரும், ஸ்ரீராமரும், வானரர்களும் சோமேசுரரைப் பூஜித்து இஷ்டசித்தியடைந் தார்கள்' என்று வாயுபகவான் சொல்ல, பிருகு முனிவர், 'அவர்கள் யாது காரணத்தினல் அந்த க்ஷேத்திரத்துக்கு வந்து பூஜித்தார்கள்' என்று கேட்க, வாயு பகவான் சொல்லுகிறார் :

முற்காலத்தில், மதுரையி லெழுந்தருளியிருக்கும் சுந்த ரேசுரர் சுந்தரபாண்டியராயும், மீநாக்ஷியம்மை அவருக்குப்

பத்தினியாயும், அவதாரஞ்செய்து அரசாண்டு வருநாளில், அவர்களுக்குச் சுப்பிரமணிய சுவாமி, உக்கிரபாண்டியன் என்னும் பெயருடன் புத்திரராக அவதாரமாயினர். உக்கிரபாண்டியனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்துவிட்டுச் சுந்தரபாண்டியர் மகாலிங்கத்தில் மறைந்தருளினர். உக்கிரபாண்டியன் குடிகளைத் தன் புத்திரர்களைப்போற் பாதுகாத்துவந்தான். தேவேந்திரன், உக்கிரபாண்டியனுடைய மேன்மையான அரசாட்சியைப்பற்றிப் பொருமைகொண்டு, வருணனை நோக்கி, மதுரையை அழித்துவிடும்படிக் கட்டளையிட்டான். உடனே சமுத்திரம் மதுரைமாநகரத்தின்மேற் பொங்கிவர, அத்தருணத்திற் சுந்தரேசுரர், நித்திரை செய்துகொண்டிருந்த உக்கிர பாண்டியனுடைய சொப்பனத்திலே தோன்றி, கடல் பொங்கிவருவதை அவனுக்கு அறிவித்து, அதை அடக்கும்படிச் சொல்லிவிட்டு மறைந்தருளினர். உக்கிரபாண்டியன் விரைந்தெழுந்து, வேலாயுதத்தைக் கடல்மேற் பிரயோகிக்க, கடல் வெகுதூரம் பின்வாங்கி நின்றது. ரதாரூடனய்வந்த உக்கிரபாண்டியன் சோமபுரத்தை அடைந்தான். இரதம் வந்த வேகத்தினல் அங்குள்ள வில்வக்கன்றுகள் முறிந்து போயின. அதைப்பாண்டியன் அறிந்திலன். சந்திரபுஷ்கரணியில் ஸ்நானஞ்செய்து, நித்தியாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஆலயத்துட்சென்று, சோமநாதரையும் ஆநந்தவல்லியையும் தரிசித்து வணங்கினன். சோமநாதர் ரிஷபாரூடராய்த் தோன்றி, அவனுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தருளினர். பாண்டியன் ஆநந்தக்கடலில் மூழ்கினவனய்ச் சோமநாதரைத் தோத்திரஞ்செய்து, கீழே விழுந்து பணிந்தான்.

பரமசிவன் பாண்டியனை நோக்கி, "அரசனே! இங்கு நீ பார்க்கும் இலிங்கத்துக்குத் திரிபாகேசர் என்று பெயர். இரண்டுபாகம் இந்த ஸ்தலத்துக்கு ஈசானதிக்கிலுள்ள தேவ

தாருவனமாகிய காளையார் கோயிலி லிருக்கின்றன. அதில் ஒரு பாகத்துக்குச் சோமேசர் என்றும், மற்றொன்றுக்குக் காளீசர் என்றும் பெயர். நீ வரும்போது உன்னுடைய இரதத்தினால் இந்தஸ்தலத்திலுள்ள வில்வக்கன்றுகள் சேதமாய் விட்டன. அதனால் உனக்குப் பாவம் சம்பவித்தது. அப் பாவம் இந்த ஸ்தலத்தில் நீங்காது. வேறு ஸ்தலத்தில்தான் நீங்கவேண்டும். காளையார் கோயிலிலே மேற்சொன்னபடி இரண்டு மூர்த்திகளா யெழுந்தருளியிருக்கின்றோம். நீ அந்த க்ஷேத்திரத்துக்குச்சென்று, அங்குள்ள கஜபுஷ்கரணி (யானை மடு) என்னும் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, சோமேசரையும் காளீசரையும் தரிசித்து வணங்கினால் அந்தப் பாவம் தீரும். பின்பு உன் நகரமாகிய மதுராபுரிக்குச் செல்லக் கடவாய். உனக்கு நல்ல புத்திரன் பிறப்பான்'' என்றருளிச் செய்து, இலிங்கத்தில் மறைந்தருளினார். உக்கிரபாண்டியன் சோமநாதருடைய கட்டளையின்படி காளையார் கோயிலுக்குச் சென்று, யானைமடுவில் ஸ்நானஞ்செய்து, சௌந்தரநாயகி சமேதரான சோமேசரையும், சொர்ணவல்லி சமேதரான காளீசரையும் தரிசித்து வணங்கி, வில்வச்செடிகளை யழித்த தோஷம்நீங்கி, மதுரையையடைந்து, கோயிலுக்குப்போய் மீனாக்ஷிசுந்தரேசரையுந் தரிசித்துக்கொண்டு, தன் அரண் மனைக்குச் சென்றான். சிறிதுநாளில் அரசனுக்குப் புத்திர பாக்கியமும் உண்டாயிற்று. புத்திரனுக்கு யுக்தவயதுவந்த வுடன் அவனுக்கு முடிசூட்டி, ராச்சியத்தை அவனிடம் ஒப்புவித்துத் தான் சிவசாயுச்சியத்தை அடைந்தான்.

பின்பு, பலராமர் சூதமுனிவரைக்கொன்ற பாவம் வில் வாரணிய க்ஷேத்திரத்தில் தீர்ந்ததென்று வாயுபகவான் சொல்ல, அந்தச் சரித்திரத்தையும் விவரமாகச் சொல்ல

வேண்டுமென்று பிருகு முனிவர் கேட்க, வாயுபகவான் சொல்லுகிறார் :—

துவாபரயுகாந்தத்தில் குருக்ஷேத்திரத்திற் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் யுத்தம் நேரிட்டது. அக்காலத்திற் பலராமர் தீர்த்தயாத்திரை செய்யக்கருதி முதலில் நைமிசாரணியத்தை அடைந்தார். அங்குள்ள முனிவர்கள் பலராமரை வணங்கிப் பூஜித்தார்கள். பௌராணிகராகிய சூதமுனிவர் மாத்திரம் கர்வததினாற் பலராமரைப் பூஜியாமலிருந்தார். அதைக்கண்டு பலராமர் கோபங்கொண்டு சூதருடைய சிரசைக் கொய்துவிட்டார். மற்ற முனிவர்கள் அதைப் பார்த்துப் பயந்து, பலராமரை நோக்கிச் சூதரை உயிர்ப்பிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். பலராமர் உடனே ஒரு தர்ப்பையை முடிந்து பூமியில்வைத்து, அதைச் சூதராகும்படி செய்துவிட்டுப் பின்பு அம்முனிவர்களைப் பார்த்து, 'கோபத்தினால் நான் சூதரைக்கொன்ற பாவம் தீரும் உபாயம் எது' என்றுகேட்க, அவர்கள், பாண்டிநாட்டிலே சோமபுரம் என்னும் பட்டணம் ஒன்றிருக்கின்றது. அதில் ஸ்ரீ ஆநந்தவல்லி சமேதராய் சோமநாதர் எழுந்தருளியிருக்கின்றார். அந்த க்ஷேத்திரத்திற் சந்திரபுஷ்கரணி என்னும் தீர்த்தமிருக்கின்றது. அதில் ஸ்நானஞ்செய்து, சோமநாதரையும் ஆநந்தவல்லியையும் பூஜித்தால், அந்தப்பாவம் தீரும்' என்றுசொன்னார்கள். பலராமர் அப்படியே செய்து, பாவம் நீங்கிப் பரிசுத்தராகித் துவாரகாபுரிக்குச் சென்றார்.

## ஐந்தாம் அத்தியாயம்.

# ஸ்ரீராமரும் வானரங்களும் பூஜித்தது.

பிருகு முனிவர் வாயுபகவானை நோக்கி, 'ஸ்ரீராமர் யாதுகாரணத்தினுற் சோமநாதரைப் பூஜித்தார். அதைச் சொல்லி அருளவேண்டும்' என்று கேட்க, வாயுபகவான் சொல்லுகிருர் :—

பூர்வகாலத்தில் ஸ்ரீராமர் சீதாதேவியோடும் லக்ஷ்மணரோடும் ஆரணியத்துக்குச் சென்று, அங்குள்ள முனிவர்களை வழிபட்டுக்கொண்டிருக்கையில், இராவணன் சீதாதேவியை அபகரித்துக்கொண்டு போய்விட்டான். சீதையின் பிரிவாற்ருமையால் இராமர் சோகமடைந்து, லக்ஷ்மணருடன் சென்று திருவிடைமருதூரை அடைந்து, அங்கு அகஸ்திய முனிவர் இருக்கக்கண்டு, அவரை வணங்கி, 'ஸ்வாமீ! நீங்கள் இந்த க்ஷேத்திரத்தில் வந்திருப்பதற்குக் காரணம் யாதோ' என்று வினவ, அகஸ்தியர், 'தைப்பூசம் சமீபித்து வருகிறபடியால் அந்தப் புண்ணியதினத்திற் காவேரியிலும், இந்த ஸ்தலத்தி லுள்ள காருண்ணிய தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து, *மகாலிங்கேசுரரைத் தரிசிக்க இங்கு வந்திருக்கின்றேன். நீயும் என்னுடன் மேற்சொன்ன தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, மருதீசரைத் தரிசிக்கலாம். இம்மாதத்தில் மகோதய புண்ணிய காலமும் வருகிறது. அதற்கு வில்வவனத்துக்குப் போகவேண்டும். அந்த க்ஷேத்திரம் மதுரைக்குக் கிழக்கே இரண்டு யோசனை தூரத்திலிருக்கின்றது. அது சகல சித்தியையுங் கொடுக்கும். அவ்விடத்தில் ஸ்ரீசோமேஸ்வரர் ஆநந்த

---

* திருவிடைமருதூரில் எழுந்தருளியிருக்குஞ் சிவபெருமானுக்கு மகாலிங்கேஸ்வரர் என்று பெயர்.

வல்லி சமேதரா யெழுந்தருளியிருக்கின்றார். அவருடைய ஆலயத்துக்குக் கிழக்கே க்ஷயரோக நிவாரணத்தின் பொருட்டுச் சந்திரனு லுண்டாக்கப்பட்ட சந்திரபுஷ்கரணி என்னும் தீர்த்த மிருக்கிறது. அந்த க்ஷேத்திரத்துக்குச் சென்று அந்த தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, சோமநாதரைத் தரிசித்தால் சீதையை அடைந்து அயோத்திக்குச்சென்று சுகமாக இருப்பாய்', என்று சொல்லிவிட்டு, இராமனுடன்சென்று, காருண்ய தீர்த்தத்திலும் காவேரியிலும் ஸ்நானஞ்செய்து, மருதீசரைத் தரிசித்து வணங்கினார். பின்பு அகஸ்தியருடைய கட்டளைப் படி, இராமர், இலக்ஷ்மணருடன் புறப்பட்டுப்போய், வில்வ வனத்தையடைந்து, ஆலயத்துக்குட்சென்று, சோமநாதரை வணங்கி, மகோதய புண்ணிய காலத்தை யெதிர்பார்த்துக் கொண்டு அப்பதியில் தங்கியிருந்தார். மகோதயபுண்ணிய காலம் வரவும், அகஸ்தியரும் அங்குவந்து சேர்ந்தார். அவரும் இராம லக்ஷ்மணர்களும் அந்தப் புண்ணியதினத்தில் சந்திரபுஷ்கரணியில் ஸ்நானஞ்செய்தார்கள். அப்பால், ஸ்ரீராமர் ஆலயத்துக்குச் சென்று, கருணைக்கடலாகிய சோமநாதரைப் பூஜித்து வணங்கி, ஆநந்தபரவசராய், 'சம்புவே! கிரீசரே! ஜகதீசரே! சூலபாணியே! கருணாரசம் நிறைந்த கமல நயனங்களை யுடையவரே! நீலகண்டரே! வில்வவனநாதரே! சந்திரசேகரரே! சோமநாதரே!' என்று ஸ்தோத்திரஞ் செய்து, சீதையிருக்கும் இடத்தைக் காட்டியருள வேண்டுமென்று, இரந்து கேட்டுக்கொண்டு, பூமியில்விழுந்து பணிந்தார். அப்போது கருணாமூர்த்தியாகிய சோமநாதர், கோடி மன்மதர்களுடைய அழகுவாய்ந்த பதினாறு வயதுபிள்ளையைப்போல் இராமர்முன் தோன்றி, 'ராமா! சீக்கிரத்தில் நீ உன் சத்துருவை ஜயித்து, சீதையை அடைவாய்' என்று அருளிச்செய்து, இலிங்கத்தில் மறைந்துவிட்டார். இராமர் மகிழ்ச்சியடைந்து இலங்கைக்குச்சென்று, இராவ

ணுதிகளை வென்று, சீதையை அழைத்துக்கொண்டு, அயோத்திக்குப்போய்த் தம்முடைய தம்பிமார்களுடன் அநேககாலம் ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டிருந்து பின்னர் வைகுண்டத்தை அடைந்தார்.

இராமர்வந்து பூஜித்ததைச் சொன்னேன். இனி அங்கதன் முதலிய வானரங்கள் வந்து பூஜித்த வரலாற்றையும் சொல்லுகிறேன் என்று வாயுபகவான் சொல்லுகிறார் :—

இராமரும் இராவணனும் யுத்தம்செய்துகொண்டிருக்கும்பொழுது, வானரசேனைகள் பசியினால் வருந்தி, தேகம் மெலிந்து, வில்வவனத்துக்குவந்து, அங்கு புராதனமாகவுள்ள சிவலிங்கத்தைக்கண்டு, 'இராமராற் பூஜிக்கப்பட்ட இம்மூர்த்தியை நாமும் பூஜித்தால் நம்முடைய பசி நீங்கும்' என்றுசொல்லி, அந்த லிங்கத்தைப் பூசித்தன. அப்பொழுது சிவபெருமான் ஒரு பிராமணரைப்போல் வானரங்களுக்கு முன்தோன்றி, அக்கினி மூலையில் மதுவினால் நிறைந்த ஒரு பள்ளத்தை அவைகளுக்குக்காட்டி மறைந்துவிட்டார். வானரங்களெல்லாம் அங்குச்சென்று அம்மதுவையுண்டு, தேகவலிவும் மனக்களிப்பும் பெற்று, அங்குள்ள காடுகளை அழித்து பிராகாரங்களை உண்டுபண்ணி, ஸ்வாமிசந்நிதிக்கு வந்து, அவரை வணங்கி 'ஸ்வாமி! சகலலோக நாயகரே! கருணாநிதியே! சோமநாதரே! மகாதேவரே! உமாமகேஸ்வரரே! பக்தவத்சலரே! சங்கரரே! எங்களால் உண்டாக்கப்பட்ட இந்தப் பட்டணத்தைச் சகல ஜனங்களும் * வானரமதுரை என்று சொல்லும்படியான வரத்தை எங்களுக்கு

---

* தமிழ்ப்புராணத்தில், வானரங்கள் மதுவை யுண்டு, பசி நீங்கி, உவகையெய்தி, கோயிலிற்சென்று, 'சுவாமி! நாங்கள் அன்போடு உம்மைப் பூஜித்தபடியாலும், எங்கள் பசிதீர தேவரீர் எங்களுக்கு மது அளித்த காரணத்தாலும், இந்தத்தலத்துக்கு வானரமதுரை என்னும் பெயர் வழங்கல்வேண்டும்' என்று பிரார்த்திக்கச் சோமநாதர் 'அப்படியே ஆகுக' என்றருளிச்செய்தார், என்று சொல்லியிருக்கிறது.

அருளல்வேண்டும்' என்று பிரார்த்திக்க, 'அப்படியே ஆகுக' என்று பரமசிவனுடைய வாக்கு ஆகாசத்திலுண்டாயிற்று. அதைக்கேட்டலும் வானரங்கள் ஆநந்தமடைந்து ஸ்ரீ ராமரிடம் போய்ச் சேர்ந்தன.

ஆரும் அத்தியாயம்.

# விபூதி மகிமை, சிவபுண்ணிய மகிமை முதலிய உரைத்தது.

**வா**யுபகவான் பிருகு ரிஷியைப் பார்த்துச் சொல்லுகிறார் :—

புண்ணியங்களிற் சிவபுண்ணியம் மேலானது. விருக்ஷங்களில் வில்வவிருக்ஷம் மேலானது. நாற்காற் பிராணிகளிற் பசு மேலானது. ஐசுவரியங்களில் விபூதி மேலானது. இவைகளின் விசேஷத்தைப்பற்றி ஆதியிற் பரமசிவன் பார்வதி தேவியாருக்கு உபதேசித் தருளினர். அதைச் சுருக்கமாக இங்குச் சொல்லுகிறேன் :

முற்காலத்தில் ஐந்து பசுக்கள் பரமசிவனுடைய உத்தரவின்படி கைலாசத்திலிருந்து பூலோகத்துக்கு வந்து, திருப்பாற்கடலைத் தேவர்களும் அசுரர்களும் கடையும்பொழுது, அதில் உற்பத்தியாயின. அவைகளின் பெயர் **நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை** என்பன. நந்தை என்பது கோரோசன வர்ணமுள்ளது. பத்திரை என்பது கறுப்பு வர்ணமுள்ளது. சுரபி என்பது வெண்மை நிறமுள்ளது. சுசீலை என்பது கறுப்பும் சிவப்பும் கலந்த வர்ணமுள்ளது.

சுமனை என்பது சிவப்பு நிறமுள்ளது. பசுக்களி லிருந்துண்டாகும் ரோசனம், சாணம், ஜலம், பால், தயிர், நெய் இந்த ஆறும் மகா பரிசுத்தமானவை. சகல சித்தியையுங் கொடுக்கத் தக்கவை. பசுக்களினிடத்தில் எல்லா தேவதைகளும் வசிக்கிறார்கள். வேதங்களும், வேதாங்கங்களும் அவைகளினிடத்திலிருந்து உண்டாயின. பசுக்களின் மகிமை இப்படிப்பட்டது.

இனி வில்வவிருக்ஷத்தின் மகிமையைச் சொல்லுகின்றேன் :—

பசுவின் சாணத்தை எருவாகப்போட்டு, அதன் மூலமாயுண்டான வில்வவிருக்ஷத்தினிடத்திற் பரமசிவனுக்கு அதிக பிரீதியுண்டு. வில்வ விருக்ஷத்தில் லக்ஷ்மி எப்பொழுதும் வசித்துக்கொண்டிருக்கின்றாள். அதனால் அவ்விருக்ஷத்துக்கு ஸ்ரீவிருக்ஷம் என்று பெயர். வில்வ பத்திரங்களைக் கொண்டு சிவலிங்கத்தை எவன் பூஜிக்கிறானோ அவன் சங்கரனாவான்.

அப்பால், விபூதியின் மகிமையைச் சொல்லுகிறேன்:—

காலையி லெழுந்து இயன்ற சுத்தி செய்துகொண்டு, பசுக்களிருக்கும் இடத்துக்கு மௌனமாய்ச் சென்று, அவைகளை நமஸ்கரித்து, அவைகளின் சாணத்தை எடுக்கவேண்டும். எடுப்பதற்குப் பௌர்ணிமை, அமாவாசை, அஷ்டமி, சூரிய சந்திர கிரகணம் இவைகள்தான் தகுந்த காலம். மற்ற காலங்களில் எடுக்கலாகாது. ஈனாத பசு, கிழப்பசு, நோயுள்ள பசு, லக்ஷணமில்லாத பசு, கன்றில்லாத பசு, கருவழிந்த பசு, இளங்கன்று, நரகலைப் புசிக்கும் பசு, கர்ப்பமாயிருக்கும் பசு இவைகளின் சாணத்தை எடுக்கலாகாது. கல்பம், அநுகல்பம், உபகல்பம், அகல்பம் என விபூதி நாலுவகைப்படும். மேலே சொன்ன குற்றங்களில்லாத பசுக்களின் சாணத்

தைத் தாமரையிலையிலாவது பலாசினிலையிலாவது ஏற்றுக் கொண்டுவந்து, உருண்டைகளாக்கி உலர்த்தித் தகனஞ் செய்து எடுத்துக்கொள்ளவேண்டும். இப்படி எடுக்கப்பட்ட விபூதிதான் கல்பம் என்று சொல்லப்படும்.

அநுகல்பமாவது காட்டில் உலர்ந்து கிடக்கும் சாண முட்டைகளைக் கொண்டுவந்து தகித்துப் பொடி செய்து வடிகட்டி யெடுத்துக் கோ ஜலத்தை விட்டுப் பிசைந்து, உருண்டையாக்கி, மறுபடி தகித்து எடுக்கும் விபூதி.

யாதொரு விதியையும் அநுசரியாமல் வீட்டிற் செய்யப் படும் விபூதி உபகல்பம் என்று சொல்லப்படும்.

பிறரா லுண்டுபண்ணப்பட்ட விபூதி அகல்பம் எனப் படும்.

விபூதியைப் புதுப்பாண்டத்தில் வைத்து, அதனுடன் வாசனைக்காகக் கற்பூரம், விளாமிச்சைவேர், தாழம்பூ, சண் பகப்பூ, மல்லிகை, நாகமல்லி, பாதிரிப்பூ, தாமரைப்பூ, பலா சப்பூ, துளசி, நாயுருவி, தர்ப்பையின் நுனி, ஜாஜிபுஷ்பம் இவைகளைக் கலந்து வைக்கவேண்டும். விபூதியைச் சுரைக் குடுக்கையிலும் வைக்கலாம். விபூதி சிவஸ்வரூபமும், அது வைக்கப்படும் பாத்திரம் சத்தி ஸ்வரூபமும் ஆகும். பிரமன் முதலிய தேவர்கள் ஸ்வரூபமாயுமுள்ளது விபூதி. சிரசு, நெற்றி, மார்பு முதலிய இடங்களில் விபூதியை உத்தூளனஞ் செய்யவேண்டும். முப்பத்திரண்டு இடங்களிலாவது, பதி னாறு இடங்களிலாவது, எட்டு இடங்களிலாவது, ஐந்து இடங்களிலாவது, விபூதியைத் தரிக்கவேண்டும். முக்கிய மாய்த் தரிக்கவேண்டிய எட்டு இடங்கள்: சிரசு, நெற்றி, கண்டம், தோள்கள், மார்பு, கொப்பூழ், முதுகின் கீழ்ப்பக்கம் என்னும் இவைகளாம். நெற்றியில் தரிக்கும்போது அண் ணாந்து இரண்டு கைகளாலும் தரிக்கவேண்டும். விபூதியைக்

கிழே சிந்தலாகாது. அது மகா பாவம். காலையிலும், மாலையிலும், உச்சிப்பொழுதிலும், அர்த்தராத்திரியிலும், படுத்துக்கொள்ளும்போதும், விழித்தெழுந்திருக்கும்போதும் போஜனம் பண்ணுவதற்கு முன்னும், போஜனம் பண்ணவுடனும், ஜலம் அருந்தினவுடனும், விபூதி தரித்தல்வேண்டும். சுருதி ஸ்மிருதி இவைகளின்படி செய்யவேண்டிய காரியங்களை விபூதி தரித்துக்கொண்டே செய்தல் வேண்டும்.

இனிச் சிவபுண்ணியத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்:—

சிவபுண்ணியம் செய்கிற புருஷன் சகல பாவங்களும் நீங்கி, சிவலோகத்தில் மகிமையை அடைகிறான். மூன்று தளங்களோடுங்கூடிய வில்வபத்திரத்தினால் எவன் பரமசிவனை அர்ச்சிக்கின்றானோ அவன் தேவர்களுக்கு அதிபதியாகிறான். சோமநாதரைத் தரிசனஞ் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்துடன் புறப்பட்டுப் போகிறவன் சுவர்க்கலோகத்தை அடைந்து, பின்பு சிவசாயுச்சியத்தை அடைகிறான். அவருடைய பூஜாகாலங்களில் அடிப்பதற்காக மணிதானஞ் செய்பவன் பாபரகிதனாய்ச் சுவர்க்கலோகத்தை அடைகிறான். அவர் அணியும்பொருட்டு வில்வ மாலை தொடுத்துக் கொடுப்பவன் இம்மையிற் சகல போகங்களையும் அநுபவித்து இறுதியிற் சிவபதத்தை அடைகிறான். தும்பைப் புஷ்பங்களைக்கொண்டு பரமசிவனுக்குச் சோமவாரத்தில் சகஸ்ரநாம அர்ச்சனை செய்விப்பவன் கைலாச பதவியை யடைகிறான். அகிற்கட்டை, சந்தனக்கட்டை, குங்கிலியம் முதலியவைகளாற் சிவாலயத்தில் தூபம் போடுகிறவன் சகல பாபங்களையும் ஒழித்துவிடுகிறான். பசுவின் நெய்யினாற் சிவாலயத்தில் தீபம் ஏற்றுகிறவன் சிவஞானத்தைப் பெறுகிறான். சம்பா அரிசி அன்னத்தை நெய்யுடன் கலந்து நிவேதிப்பவன் அநேக காலம் சிவலோகத்தில் மகிமையடைந்திருப்பான். தாம்பூலம், பழம், முதலிய நிவேதிப்பவன் சுவர்க்கலோகத்தை

அடைகிறான். சிவாலயத்திற் பத்தியுடன் அங்கப் பிரதக்ஷிணம் செய்பவன், பிரமகத்தி முதலிய பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான். சிவசந்நிதியிலே நிர்த்தனஞ் செய்யும் பத்திமான்கள் முன்னே, சுவர்க்க லோகத்தில் அரம்பை முதலிய அப்ஸர ஸ்திரீகள் நிர்த்தனஞ் செய்வார்கள். மிருதங்கம், வீணை முதலிய வாத்தியங்களைச் சிவசந்நிதியில் வாசிப்பவன், பேரின்பத்தை யடைகிறான். வேத மந்திரங்களினாற் சிவ ஸ்தோத்திரம் செய்கிறவன், சிவ சாரூபத்தை அடைகிறான். ஸ்ரீருத்ரம், சமகம், இந்த மந்திரங்களைச் சொல்லி, சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்கிறவன் சிவ சாமீபத்தை அடைகிறான். கங்காளம், மணி, வெண்பட்டு, வஸ்திரம், சுவர்ணத்தினாற்செய்த குவளை, பாத்திரங்கள், ஆபரணங்கள், பசுக்கள், தூபகலசம், தீபாராதனைத் தட்டு முதலியவைகளைச் சிவாலயத்துக்குக் கொடுக்கிறவன், மண்டபம், கோபுரம், முதலியவைகளை ஜீர்ணோத்தாரணம் பண்ணுகிறவன், புதிதாக உண்டுபண்ணுகிறவன், நந்தவனம் வைக்கிறவன், குளம் வெட்டுகிறவன், அதற்குப் படி கட்டுகிறவன், இவர்களைப் பரமசிவன் விட்டு நீங்காம லிருப்பார்.

இவ்வாறு சிவபுண்ணியங்களைச் சொல்லியருளிய பின்பு பரமசிவன் பார்வதி தேவியாருடன் வில்வவனத்தி லெழுந்தருளிவந்து, பார்வதி தேவியாரை அங்கு சீக்கிரம் நடந்து போம்படி சொல்ல, அவரும் அப்படியே செய்தார். பரமசிவன் அவர் பின்னே தொடர்ந்து சென்றார். அச்சமயத்தில் விஷ்ணுமூர்த்தியும் லக்ஷ்மி தேவியுடன் அவ்விடத்திலெழுந்தருளி, சோமநாதர் ஆநந்தவல்லியுடன் செய்யும் அதியற்புதமான திருவிளையாடல்களைக் கண்டு சந்தோஷமடைந்தார். பரமசிவன் பார்வதி தேவியார் திருக்கரத்திலிருந்த வளையல்களை விளையாட்டினால் உடைத்துவிடுவார். உடனே மகாவிஷ்ணு அவைகளை முன்போல உருவப்படுத்திக் கொடுப்

பார். அடிக்கடி பரமசிவன் வளையல்களை உடைத்துக்கொண்டு வர, விஷ்ணுமூர்த்தி அவைகளைச் சரிப்படுத்திக் கொடுப்பார். அதைக்கண்டு ஆநந்தவல்லி விஷ்ணுமூர்த்திக்குத் தியாக விநோதர் என்னும் பெயரைக் கொடுக்க, விஷ்ணுமூர்த்தி சந்தோஷமடைந்து பார்வதி தேவியாருக்கு * ஆபாவக லதா என்னும் பெயரைக் கொடுத்தார். அப்பொழுது பரமசிவன் விஷ்ணுமூர்த்தியை யழைத்து, 'நீ நம்முடைய ஆலயத்துக்கு நிருதி மூலையிலிருந்துகொண்டு, உன்னைத் தொழுபவர்களுக்கு வேண்டிய வரங்களைக் கொடுத்து அநுக்கிரகஞ் செய்' என்று சொல்லிவிட்டு ஆநந்தவல்லியுடன் மறைந்தருளினார்.

பின்பு, பிருகு முநிவர், வாயுபகவானைப் பார்த்து, வைகைநதியிலும் சந்திரபுஷ்கரணியிலும் ஸ்நானஞ்செய்வதனாலுண்டாகும் பலனைச் சொல்லியருள வேண்டுமென்று கேட்க, வாயுபகவான் சொல்லுகிறார் :—

வைகைநதியிலும் சந்திரபுஷ்கரணியிலும் சாதாரண தினங்களில் ஸ்நானஞ்சேய்தாலும் விசேஷபலனுண்டு. தக்ஷிணாயனம், உத்தராயணம், வியதீபாதம், மஹோதயம், அர்த்தோதயம், சோமவாரம், அமாவாசை இந்தப் புண்ணிய தினங்களில் ஸ்நானஞ்செய்தால், அதனால் உண்டாகும்பலன் இவ்வளவென்று சொல்ல என்னாலும் மற்றியாராலும் முடியாது. அதனை அறிபவர் சோமநாதரே.

---

* ஆபாவகம் = கடகம் : வளையல் ; லதா = கொடி. வளையலை யணிந்த கொடி போன்றவள்.

## ஏழாம் அத்தியாயம்

# மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் உரைத்தது.

**பா**ண்டிநாட்டிலே, மதுரைக்கு ஈசானதிக்கிலே பத்து நாழிகை வழி தூரத்திலே திருவாதவூர் என்னும்திவ்ய க்ஷேத்திர மிருக்கிறது. அந்தப்பதியிலே சகல சாஸ்திர விற்பன்னரும் சிவபக்தசிரோமணியும் ஆகிய வாதபுரீசர் திருவவதாரஞ் செய்தருளினர். அவர் மதுரையிலிருந்த அரிமர்த்தன பாண்டிய ராஜனிடத்தில் மந்திரியாக அமர்ந்து, பொக்கிஷத்திலிருந்த திரவியங்களை யெடுத்து, அப்பதியிலெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசருடைய பூஜைக்குக் கொடுத்துக்கொண்டு வந்தார். சில காலஞ் சென்றபின் பாண்டியன் வாதபுரீசரை அழைத்து 'நம்மிடத்திற் குதிரைகள் சொற்பமா யிருப்பதால், பொக்கிஷத்திலிருந்து, வேண்டிய திரவியங்களை யெடுத்துக்கொண்டு போய்க் குதிரைகளை வாங்கி வாரும்' என்று சொல்ல, வாதபுரீசர் அப்படியே திரவியங்களை யெடுத்துக்கொண்டுபோய்த் திருப்பெருந்துறை என்னும் க்ஷேத்திரத்தை யடைந்து, அங்கெழுந்தருளியிருக்கும் ஆத்மநாதசுவாமிக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்துகொண் டிருந்தார். அப்போது பரமசிவன் குருமூர்த்தமா யெழுந்தருளிவந்து அவருக்கு உபதேசஞ் செய்யவே, அவர் மகாஞானியாய்விட்டார். கொண்டுவந்த திரவியங்கள் கோயில் திருப்பணியிற் செலவழிந்துவிடவும், வாதபுரீசர், பாண்டியன் நம்மேற் கோபிப்பானே என்று பயந்து, குதிரைகள் கிடைக்க வேண்டியதற்காக ஆத்மநாதரைத் துதித்து வேண்டிக்கொண்டார். அக்

கடவுள் அவரை வில்வவன க்ஷேத்திரத்துக்குப் போம்படிக்கும், அங்கு நல்ல லக்ஷணங்களையுடைய குதிரைகளைத் தாம் கொண்டு வருவதாகவும் அநுக்கிரகஞ் செய்தார். வாதபுரீசர் உடனே புறப்பட்டு வில்வவன க்ஷேத்திரத்தை அடைந்து, சந்திரபுஷ்கரணியிலும் வைகையாற்றிலும் ஸ்நானஞ்செய்து, நித்தியகர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, ஆலயத்துக்குச்சென்று ஸ்ரீ சோமநாதரையும் ஆநந்தவல்லியையும் பூஜித்து வணங்கி, மறுபடி சுவாமி சந்நிதிக்கு வந்து பல முறை நமஸ்கரித்தெழுந்து, உபநிடத வாக்கியங்களைக் கொண்டு, சோமநாதரை ஸ்தோத்திரஞ் செய்தார். அக்கடவுள் அவருக்குப் பிரத்தியக்ஷமாகி, 'நீ பயப்படவேண்டாம். நல்லகுதிரைகளை நாம் கொண்டுவருகிறோம். நீ பாண்டியனிடத்துக்குத் தைரியமாகச் செல்' என்று அருளிச்செய்து மறைந்துவிட்டார். வாதபுரீசர் சுவாமியை வணங்கி விடை பெற்றுக்கொண்டு, பாண்டியனிடம் சென்று 'நல்ல லக்ஷணங்களையுடைய குதிரைகள் விரைவில் வந்துசேரும். அவைகளைக் கட்டுவதற்கு * மந்துரம் ஏற்படுத்தவேண்டும்' என்று தெரிவித்து, பின்பு ஸ்ரீ மீநாக்ஷிசுந்தரேசருடைய ஆலயத்துக்குச் சென்று வணங்கித் தம்மைக் காத்து ரக்ஷிக்கவேண்டும் என்று சொக்கநாதரைப் பிரார்த்தித்தார். அப்பொழுது, கிருபாநிதியாகிய சுந்தரேசுரர் வாதபுரீசருக்குத் தோன்றி,

---

* மந்துரம் = குதிரை லாயம்.

சோமசுந்தரக் கடவுள் நரிகளைப் பரிகளாக்கி மதுரைக்குக் கொண்டுவந்ததும், அப்பரிகள் முன்போல் நரிகளானதும், வாதபுரீசருடைய மற்றைச் சரித்திரமும், அவர் திருவாசகம் பாடி, **மாணிக்கவாசகர்** என்னும் அருமைத் திருநாமம் பெற்றது முதலியவும், திருவிளையாடற் புராணத்திலும் திருவாதவூரடிகள் புராணத்திலும் விவரித்திருப்பதைக் கண்டுகொள்க.

வில்வாரணியத்திலே சோமேசர் என்னும் பெயருடன் வசிப்பது நாமே; அதற்கு அடையாளமாக சோமநாதருக்கு மேற்குப்பக்கத்தில் கடம்பவிருக்ஷமும், ருஷபமும், சூலமும் பொருந்தியிருப்பதைப் பார்க்கலாம். நீ பயப்படாமல் உன்னுடைய கிரகத்திற்குப்போயிரு' என்று அருளிச் செய்து லிங்கத்தில் மறைந்துவிட்டார். வாதபுரீசர் சுந்தரேசரை வணங்கிக்கொண்டு தம்முடைய கிரகத்துக்குப் போய்ச் சுகித்திருந்தார்.

## எட்டாம் அத்தியாயம்.

# வைகைநதி, சந்திரபுஷ்கரணி, இவைகளின் மகிமை உரைத்தது.

**வா**யுபகவான் சொல்லுகிறார் :—

காஞ்சீபுரத்திலே ஆநந்தர் என்றொரு பிராமணர் இருந்தார். அவர் வேதத்தை நன்று யறிந்தவர். வித்வசிரேஷ்டர். நித்தியகர்மாநுஷ்டானங்களைக் கிரமப்படி செய்பவர். சிவபூஜா துரந்தரர். அவர் மனைவியின் பெயர் சுந்தரி. அவள் புருஷனிடத்தில் அதிக அன்புள்ளவளாய் அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துவந்தாள். அவளும் பரமசிவனிடத்திற் பக்தியுள்ளவளாய்ச் சோமவார விரதத்தை அநுஷ்டித்துவந்தாள். ஒரு சோமவார தினத்திலே அவள் காமத்தினாற் பீடிக்கப்பட்டுத் தன் நாயகனைப் புணர்ந்தாள். அந்த பாவத்தினாலே இருவருடைய தேகத்திலும் குஷ்டநோ யுண்டாயிற்று; அதைக்கண்டு, அவர்கள் கலக்கமுற்று

அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு, சிவஸ்தலங்கள்தோறும் சென்று தரிசனஞ்செய்துகொண்டு, சிதம்பரக்ஷேத்திரத்தை அடைந்தார்கள். அங்கே சிவகங்கையின் கரையிலே உரோமச ரிஷியானவர் தவஞ்செய்துகொண்டிருந்தார். அவர் மூன்றுகாலங்களையும் அறிந்தவர். மிகுந்த பரிசுத்தர். உலகத்துக்கு அநுக்கிரகம் பண்ணும் விருப்பமுள்ளவர். புலன்களை வென்றவர். அவரைக் கண்டவுடனே இருவரும் நமஸ்கரித்துத் தங்களுடைய ரோக நிவாரணமாகும் பொருட்டு அவரைப் பிரார்த்தித்தார்கள். முநிசிரேஷ்டர் அவர்களைப் பார்த்து, ஒரு முகூர்த்தகாலம் பரமசிவனைத் தியானித்து, அவர்களுடைய நோயைத் தீர்க்கவல்ல தீர்த்தத்தைத் தெரிந்து சொல்லுகிறார்:—

'மதுரைக்கு கிழக்கே மூன்றுகாத தூரத்திலே, சகல சித்தியையும் தரத்தக்க க்ஷேத்திரம் ஒன்றிருக்கின்றது. அதற்கு வில்வாரணியக்ஷேத்திரம் என்றுபெயர். பெரியோர்கள் அதை வானரபுரம் என்று சொல்லுவார்கள். அங்கே சிவபெருமான் சோமநாதர் என்னும் பெயருடன் விளங்கிக் கொண்டிருக்கிறார். அவருடைய சந்நிதிக்கெதிரில் வைகை நதியும் சந்திரபுஷ்கரணி என்னும் தீர்த்தமும் இருக்கின்றன. நீங்களிருவரும் அவ்விடஞ்சென்றால், உங்களுடைய நோய் நிவாரணமாகும்' என்றார். பின்பு சுந்தரியும் அவள் நாயகனும் சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து, சிற்சபா நடேசமூர்த்தியையும் சிவகாமியம்மையையுந் தரிசித்து வணங்கி, விடைபெற்றுச்சென்று, வில்வவனக்ஷேத்திரத்தை யடைந்து, அங்குள்ள வைகை நதியிலும் சந்திரபுஷ்கரணியிலும் ஸ்நானஞ் செய்தார்கள். உடனே அவர்களுடைய நோய் நிவாரணமாகி அழகுள்ள தேகத்தோடும் விளங்கினார்கள். பின்பு ஆலயத்துக்குச் சென்று பக்தாநுக்கிரக தற்பரராயுள்ள சோமநாதரையும், கிருபாநிதியாகிய ஆநந்தவல்லியையுந் தரி

சித்து வணங்கி, ஸ்தோத்திரஞ்செய்து, அந்தப்பதியிலேயே அநேக நாள் வசித்துக்கொண்டிருந்து முத்தியடைந்தார்கள்.

---

இவ்வாறு ஸ்தலம், மூர்த்தி, தீர்த்தம் இவற்றின் வைபவங்களை வாயுபகவான் சொல்லிமுடித்தவுடன், பிருகு முநிவர், சொர்ண புஷ்பங்களைக்கொண்டு அவரை அர்ச்சித்து, நமஸ்கரித்து, ஸ்தோத்திரஞ்செய்து, அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, வில்வாரணிய க்ஷேத்திரத்தையடைந்து, வைகை நதியிலும் சந்திரபுஷ்கரணியிலும் ஸ்நானஞ்செய்து, ஆலயத்துக்குச்சென்று, சோமநாதரையும், ஆநந்தவல்லியையும் பூஜித்து அந்த க்ஷேத்திரத்தில் வசித்துக்கொண்டிருந்தார்.

இப்படிப்பட்ட க்ஷேத்திரத்தின் மகிமையைச் சொல்ல வல்லவர் யாவர்? சிவபெருமான்தான் சொல்லியருளல் வேண்டும். இதற்குச் சமானமான க்ஷேத்திரம் வேறொன்றும் இல்லை. இந்தச் சரித்திரத்தைச் சொன்னதனால் நான் கிருதார்த்தனானேன்; கேட்டதனால் நைமிசாரணிய வாசிகளாகிய நீங்கள் கிருதார்த்தரானீர்கள் என்று சூதமுநிவர் சொல்லியருளினார்.

ஸ்ரீ ஆநந்தவல்லியம்பா சமேத
சோமநாதேஸ்வரஸ்வாமி ஸஹாயம்.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

# அநுபந்தம்

𑌶𑍁𑌭𑌮𑌸𑍍𑌤𑍁.

சுபமஸ்து :

2-ஆவது 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯த்தில் 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃.

இரண்டாவது அத்தியாயத்ல் சந்த்ர ஸ்துதி.

𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌧𑌾𑌮𑌕𑌮𑌨𑍀𑌯𑌜𑌟𑌾𑌧𑌰𑌾𑌯 । 𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌕𑌾𑌯𑌕𑌲𑌿𑌕𑌲𑍍𑌮𑌷𑌨𑌾𑌶𑌨𑌾𑌯 । 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌕𑍋𑌟𑌿𑌶𑌤𑌸𑍁𑌨𑍍𑌦𑌰𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌾𑌯 । 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌥𑌨𑌾𑌯𑌕𑌶𑌂𑌕𑌰𑌾𑌯 ॥

கல்லியாணதாம! கமநீய ஜடாதராய! காலாந்தகாய! கலிகல்மஷ நாசநாய! கந்தர்ப்பகோடி சதசுந்தர சன்னிபாய! துப்யம் நமஃ திரிபத நாயக, சங்கராய. (௧)

𑌪𑌞𑍍𑌚𑌾𑌨𑌨𑌾𑌯𑌪𑌵𑌨𑌾𑌶𑌨𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌾𑌯 । 𑌪𑍍𑌰𑍋𑌤𑍍𑌫𑍁𑌲𑍍𑌲𑌮𑌾𑌨𑌨𑌵𑌪𑌦𑍍𑌮𑌵𑌿𑌲𑍋𑌚𑌨𑌾𑌯 । 𑌪𑌂𑌕𑍇𑌰𑍁𑌹𑌾𑌕𑍍𑌷𑌨𑌯𑌨𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑌪𑌾𑌦𑌪𑌦𑍍𑌮 । 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌥𑌨𑌾𑌯𑌕𑌶𑌂𑌕𑌰𑌾𑌯 ॥

பஞ்சாநநாய! பவநாசந குண்டலாய! ப்ரோத் புல்ல மாந நவபத்ம விலோசநாய! பங்கேருஹாக்ஷ நயநார்ச்சித பாதபத்ம! துப்யம் நமஃ திரிபதநாயக சங்கராய. (௨)

𑌗𑌂𑌗𑌾𑌧𑌰𑌾𑌯𑌗𑌰𑍁𑌡𑌾𑌸𑌨𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑌾𑌯 । 𑌗𑍀𑌰𑍍𑌵𑌾𑌣𑌲𑍋𑌕𑌸𑍁𑌖𑌦𑌾𑌯𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌾𑌯 । 𑌕𑍍𑌷𑍋𑌣𑍀𑌰𑌥𑌾𑌯𑌰𑌵𑌿𑌨𑌯𑌨𑌾𑌯 𑌶𑌶𑌾𑌂𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰 । 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌥𑌨𑌾𑌯𑌕𑌶𑌂𑌕𑌰𑌾𑌯 ॥

கங்காதராய! கருடாசந வந்திதாய! கீர்வாணலோக சுகதாய! குணார்ணவாய! க்ஷோணீரதாய திநநாத சசாங்க சந்த்ர! துப்யம் நமஃ திரிபத நாயக சங்கராய. (௩)

𑌵𑍃𑌨𑍍𑌦𑌾𑌰𑌕𑌾𑌲𑌯𑌶𑌰𑌾𑌸𑌨𑌶𑍂𑌲𑌪𑌾𑌣𑍇 । 𑌮𑍌𑌰𑍍𑌵𑍀𑌕𑍃
𑌤𑌾𑌖𑌿𑌲𑌸𑌰𑍀𑌸𑍃𑌪𑌨𑌾𑌯𑌕𑌾𑌯 । 𑌪𑌦𑍍𑌮𑌾𑌲𑌯𑍇𑌶𑌪𑌵𑌮𑌾𑌨
𑌸𑌖𑌾𑌶𑌰𑌾𑌯 । 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌥𑌨𑌾𑌯𑌕𑌶𑌂𑌕𑌰𑌾𑌯 ॥

பிருந்தார காலய, சராசன, சூலபாணே! மவுர்வீ, க்ருதாகில, ஸரீசிருபநாயகாய! பத்மாலயேச, பவமாநசகா சராய துப்யம் நமஃ திரிபத நாயக, சங்கராய! (௪)

𑌶𑌰𑍍𑌵𑌾𑌯𑌦𑌕𑍍𑌷𑌮𑌖𑌶𑍌𑌰𑌿𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌾𑌯 । 𑌕𑍍𑌷𑍀𑌰𑌾𑌬𑍍𑌧𑌿
𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑌹𑌾𑌲𑌾𑌹𑌲𑌭𑌕𑍍𑌷𑌣𑌾𑌯 । 𑌮𑌨𑍍𑌦𑌾𑌰𑌪𑍁𑌷𑍍𑌪𑌪𑌰𑌿𑌶𑍋𑌭𑌿
𑌭𑍁𑌜𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌯 । 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌥𑌨𑌾𑌯𑌕𑌶𑌂𑌕𑌰𑌾𑌯 ॥

சர்வாய! தக்ஷ, மகசௌரி, விநாசநாய! க்ஷீராப்தி பூர்வஜ, ஹலா ஹல பக்ஷணாய! மந்தார, புஷ்ப, பரிசோபி, புஜாந்தராய! துப்யம் நமஃ திரிபத நாயக சங்கராய! (௫)

𑌕𑍍𑌰𑍋𑌡𑌾𑌬𑍍𑌜𑌲𑍋𑌚𑌨𑌵𑌿𑌦𑍂𑌰𑌪𑌦𑌾𑌂𑌬𑍁𑌜𑌾𑌯 । 𑌹𑌂𑌸𑌾
𑌬𑍍𑌜𑌸𑌂𑌭𑌵𑌵𑌿𑌦𑍂𑌰𑌸𑍁𑌮𑌸𑍍𑌤𑌕𑌾𑌯 । 𑌶𑍈𑌲𑍂𑌷𑌕𑌾𑌨𑌨
𑌨𑌿𑌵𑌾𑌸𑌕𑍁𑌤𑍂𑌹𑌲𑌾𑌯 । 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌥𑌨𑌾𑌯𑌕𑌶𑌂𑌕
𑌰𑌾𑌯 ॥

க்ரோடாப்ஜ லோசன விதூர பதாம்புஜாய! ஹம்சாப்ஜ சம்பவ விதூர சு மஸ்தகாய! சைலூஷ காநந நிவாச குதூகலாய! துப்யம் நமஃ திரிபத நாயக, சங்கராய! (௬)

𑌹𑌸𑍍𑌤𑌾𑌂𑌗𑌨𑌾𑌗𑌵𑌰𑌿𑌶𑌿𑌞𑍍𑌜𑌕𑌙𑍍𑌕𑌣𑌾𑌯 । 𑌵𑌦𑌾𑌰𑍁𑌦𑍇𑌵
𑌤𑌾𑌰𑍁𑌵𑍇𑌷𑌨𑌾𑌶𑌕𑌾𑌯 । 𑌉𑌗𑍍𑌰𑌾𑌯𑌸𑌤𑍍𑌯𑌵𑌚𑍋𑌷𑌵𑌸𑌾𑌧𑌾𑌰𑌯
𑌕𑌯𑌾 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿 𑌪𑌥𑌨𑌾𑌯𑌕𑌶𑌂𑌕𑌰𑌾𑌯 ॥

பஸ்மாங்க நாக பரிதிக்த களேபராய! வந்தாரு தேவதரவே! மதநாந்தகாய! உக்ராய! சத்ய! வபுஷே வசுதாயகாய! துப்யம் நம: திரிபத நாயக சங்கராய. (எ)

𑌭𑌰𑍍𑌗𑌾𑌯𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌸𑌨𑌾𑌯𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 । 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌯𑌕𑍍𑌷
𑌸𑍁𑌰𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌵𑌨𑍍𑌦𑌿𑌤𑌾𑌯 । 𑌈𑌶𑌾𑌯𑌦𑍇𑌵𑌤𑌟𑌿𑌨𑍀𑌜𑌲𑌸𑌿𑌕𑍍𑌤𑌕𑍇𑌶 ।
𑌤𑍁𑌭𑍍𑌯𑌂𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌪𑌦𑌨𑌾𑌯𑌕𑌶𑌙𑍍𑌕𑌰𑌾𑌯 ॥

பர்க்காய! க்ருத்திவசநாய! மகேஸ்வராய! கந்தர்வ யக்ஷ சுரகின்னர வந்திதாய! ஈசாய! தேவதடிநீ ஜலசிக்த கேச! துப்யம் நம: திரிபத நாயக சங்கராய. (அ)

---

### 3-ஆவது 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯த்தில் 𑌸𑍍𑌥𑍂𑌲𑌕𑌰𑍍𑌣𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃.

### 3-ஆவது அத்யாயத்தில் ஸ்தூல கர்ண ஸ்துதி.

𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵 𑌸𑍋𑌮𑌨𑌾𑌥 𑌦𑌯𑌾𑌕𑌰 ।
𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌕𑌾𑌮𑌾𑌰𑍇 𑌪𑌾𑌹𑌿𑌮𑌾𑌂 𑌦𑍀𑌨𑌮𑌞𑍍𑌜𑌸𑌾 ॥

தேவதேவ! மகாதேவ சோமநாத! தயாகர!
பரமேஸ்வர! காமாரே! பாஹிமாம் தீனமஞ்சசா! (க)

𑌅𑌧𑍍𑌵𑌰𑍇𑌶 𑌦𑌯𑌾𑌮𑍂𑌰𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌦𑍁𑌃𑌖𑌵𑌿𑌨𑌾𑌶𑌨 ।
𑌕𑌾𑌲𑌕𑌣𑍍𑌠 𑌕𑌲𑌾𑌤𑍀𑌤 𑌪𑌾𑌹𑌿𑌮𑌾𑌂 𑌦𑍀𑌨𑌮𑌞𑍍𑌜𑌸𑌾 ॥

அத்வரேச! தயாமூர்த்தே! சர்வதுக்க விநாசந!
காலகண்ட! கலாதீத! பாஹிமாம் தீனமஞ்சசா! (உ)

𑌪𑌿𑌤𑌾𑌮𑌹 𑌶𑌿𑌰𑌶𑍍𑌛𑍇𑌦 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌨𑍇𑌤𑍍𑌰 𑌸𑍁𑌪𑍂𑌜𑌿𑌤 ।
𑌭𑌾𑌨𑍁𑌕𑍋𑌟𑌿 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌭 𑌪𑌾𑌹𑌿𑌮𑌾𑌂 𑌦𑍀𑌨𑌮𑌞𑍍𑌜𑌸𑌾 ॥

பிதாமக சிரச்சேத! விஷ்ணு! நேத்ர சு பூஜித!
பாநுகோடி சகஸ்ராப! பாஹிமாம் தீனமஞ்சசா! (ந)

𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌸𑍍𑌤𑍍𑌰 𑌜𑌗𑌨𑍍𑌨𑌾𑌥 𑌕𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌾𑌸𑍁𑌤𑌪𑍂𑌜𑌿𑌤 ।
𑌭𑌕𑍍𑌤𑌰𑌕𑍍𑌷𑌕 𑌭𑍂𑌤𑍇𑌶 𑌪𑌾𑌹𑌿 𑌮𑌾𑌂 𑌦𑍀𑌨𑌮𑌞𑍍𑌜𑌸𑌾 ॥

கிருத்திவஸ்த்ர! ஜகந்நாத! கிருத்திகா சுத பூஜித!
பக்தரக்ஷக! பூதேச! பாஹிமாம் தீனமஞ்சசா. (௪)

𑌅𑌨𑍍𑌧𑌕𑌾𑌨𑍍𑌤𑌕 𑌗𑍌𑌰𑍀𑌶 𑌦𑍇𑌵𑌤𑌾𑌗𑌣𑌵𑌨𑍍𑌦𑌿𑌤 ।
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌚𑍂𑌡 𑌪𑍁𑌰𑌾𑌰𑌾𑌤𑍇 𑌪𑌾𑌹𑌿 𑌮𑌾𑌂 𑌦𑍀𑌨𑌮𑌞𑍍𑌜𑌸𑌾 ॥

அந்தகாந்தக! கௌரீச! தேவதா கணவந்திதா!
சந்த்ரசூட! புராராதே! பாஹிமாம் தீனமஞ்சசா! (௫)

𑌕𑌲𑌾𑌨𑌿𑌧𑍇 𑌪𑌰𑌾𑌧𑍀𑌶 𑌕𑌾𑌮𑌿𑌤𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌕 ।
𑌕𑌲𑌙𑍍𑌕𑍀𑌕𑍃𑌤𑌸𑍋𑌮𑍇𑌶 𑌪𑌾𑌹𑌿 𑌮𑌾𑌂 𑌦𑍀𑌨𑌮𑌞𑍍𑌜𑌸𑌾 ॥

கலாநிதே! பராதீச! காமிதார்த்த, ப்ரதாயக!
களங்கிக்ருத, சோமேச! பாஹிமாம் தீனமஞ்சசா. (௬)

𑌶𑍀𑌤𑌭𑌾𑌨𑍁𑌕𑌲𑌾𑌮𑍌𑌲𑍇 𑌶𑌰𑌣𑌾𑌗𑌤𑌵𑌤𑍍𑌸𑌲 ।
𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌕𑍋𑌟𑌿𑌲𑌾𑌵𑌣𑍍𑌯 𑌪𑌾𑌹𑌿 𑌮𑌾𑌂 𑌦𑍀𑌨𑌮𑌞𑍍𑌜𑌸𑌾 ॥

சீத பாநு கலா மௌலே சரணாகத வத்சல!
கந்தர்ப்ப கோடிலாவண்ய! பாஹிமாம் தீனமஞ்சசா! (௭)

𑌸𑍋𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌯 𑌤𑍍𑌰𑌿𑌪𑌥𑌾𑌧𑌿𑌪𑌾𑌯
𑌬𑌿𑌲𑍍𑌵𑌾𑌟𑌵𑍀𑌮𑌧𑍍𑌯𑌨𑌿𑌕𑍇𑌤𑌨𑌾𑌯 ।
𑌆𑌨𑌨𑍍𑌦𑌵𑌲𑍍𑌲𑍀𑌪𑌤𑌯𑍇 𑌶𑌿𑌵𑌾𑌯
𑌨𑌮𑍋 𑌨𑌮𑌶𑍍𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌕𑌲𑌾𑌧𑌰𑌾𑌯 ॥

சோமேச்வராய! திரிபதாதிபாய!
பில்வாடவீ மத்யநிகேதநாய!
ஆநந்தவல்லீ பதயே சிவாய
நமோ நமச்சந்த்ரகலாதராய. (௮)

## 4-ஆவது 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯த்தில் 𑌉𑌗𑍍𑌰𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃.

## 4-ஆவது அத்யாயத்தில் உக்ரபாண்டிய ஸ்துதி.

𑌅𑌖𑌿𑌲𑌭𑍁𑌵𑌨𑌨𑌾𑌥 𑌤𑍍𑌰𑌾𑌹𑌿𑌮𑌾𑌂 𑌶𑍂𑌲𑌪𑌾𑌣𑍇। 𑌶𑌶
𑌧𑌰 𑌪𑍁𑌰𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨 𑌹𑍇𑌮𑌾𑌦𑍍𑌰𑌿𑌚𑌾𑌪। 𑌮𑍁𑌰𑌰𑌿𑌪𑍁 𑌶𑌰
𑌗𑌙𑍍𑌗𑌾 𑌤𑍁𑌙𑍍𑌗𑌭𑌙𑍍𑌗𑌾𑌰𑍍𑌦𑍍𑌰𑌮𑍌𑌳𑍇 । 𑌕𑍁𑌸𑍁𑌮𑌶𑌰𑌯𑌮𑌾𑌰𑍇
𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌾𑌬𑍍𑌜𑌨𑌾𑌥 ॥

அகில புவநநாத த்ராஹிமாம், சூலபாணே சசதர புர மத்யஸ்தான ஹேமாத்திரி சாப! முர ரிபு சர கங்கா துங்கபங்கார்த்ர மௌலே! குசும சரய மாரே தேவ தேவாப்ஜநாத!

---

## 5-ஆவது 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯த்தில் 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌃.

## 5-ஆவது அத்யாயத்தில் ஸ்ரீராம ஸ்துதி.

𑌶𑌮𑍍𑌭𑍋 𑌪𑍁𑌰𑌾𑌣 𑌜𑌗𑌦𑍀𑌶𑍍𑌵𑌰 𑌶𑍂𑌲𑌪𑌾𑌣𑍇 ।
𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌪𑍂𑌰𑍍𑌣 𑌨𑌯𑌨𑌾𑌮𑍍𑌬𑍁𑌜 𑌨𑍀𑌲𑌕𑌣𑍍𑌠। 𑌶𑍍𑌰𑍀𑌵𑍃𑌕𑍍𑌷
𑌕𑌾𑌨𑌨 𑌨𑌿𑌵𑌾𑌸 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕𑌮𑍌𑌳𑍇 । 𑌮𑌾𑌂𑌪𑌾𑌲𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑌿𑌨𑌂
𑌰𑌜𑌨𑍀𑌶𑌨𑌾𑌥।

சம்போ! புராண! ஜகதீஸ்வர! சூலபாணே! காருண்ய பூர்ண! நயநாம்புஜ நீலகண்ட! ஸ்ரீ விருக்ஷ காநந நிவாஸ! சசாங்கமௌலே! மாம்பாலய, ப்ரதி திநம், ரஜநீசநாத!

Kesari Printing Works, Madras.

## விற்பனைக்குரிய புத்தகங்கள்.

| | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|
| 1. | திருப்புகழ் முதற்பாகம் .... | 2 | 8 | 0 |
| 2. | ஷை இரண்டாம் பாகம் .... | 2 | 8 | 0 |
| 3. | ஷை மூன்றும் பாகம் .... | 3 | 0 | 0 |
| 4. | சிவஸ்தல மஞ்சரி .... ... | 1 | 8 | 0 |
| 5. | பிரமோத்தர காண்டம் (சிவ கதை) .... | 0 | 6 | 0 |
| 6. | திருத்தருப்பூண்டி புராண வசனம் .... | 0 | 6 | 0 |
| 7. | திருவாடானைப் புராணமும் வசனமும் | 0 | 12 | 0 |
| 8. | காசி மாஹாத்மியம் (சிவ கதை) .... | 0 | 1 | 0 |
| 9. | திருநீடூர்த் தல புராணம் .... .... | 0 | 4 | 0 |
| 10. | திருத்தணிகைத் திருப்புகழ் முதலியன | 0 | 6 | 0 |
| 11. | திருத்தணிகைத் தலபுராண வசனம் ... | 0 | 3 | 0 |
| [illegible] | ஷை 10-11 ஒன்றுய்ச் சேர்ந்தது | 0 | 8 | 0 |
| [illegible] | ...றுபத்துநான்கு திருவிளையாடற்பாட்டு | 0 | 2 | 0 |
| [illegible] | ...story of the Tamil Prose Literature .... | 0 | 6 | 0 |
| [illegible] | ...ரமூர்த்தி ஸ்வாமிகள சரித்திரம் .... | 0 | 6 | 0 |
| 16. | வ. த. சுப்பிரமணிய பிள்ளை சரித்திரம் | 0 | 12 | 0 |
| 17. | கடோரசித்தன் கதை .... | 0 | 2 | 0 |
| 18. | வேல் பாட்டு .... ... | 0 | 0 | 6 |
| 19. | மஞ்ஞைப் பாட்டு .... .... | 0 | 0 | 6 |
| 20. | சேவற் பாட்டு .... ... | 0 | 0 | 6 |
| 21. | வள்ளி-கிழவர் வாக்குவாதம் .... | 0 | 0 | 6 |
| 22. | சுந்தர விலாசம் .... .... | 0 | 6 | 0 |
| 23. | குமரன் தலக்குறட்பா கன்னிக்குமரி .... | 0 | 0 | 6 |

ஒரே காலத்திற் பத்துப் பிரதிகள் வாங்கினுல் ஒரு பிரதி விலையின்றிக் கொடுக்கப்படும். தபாற் செலவு முதலியன வேறு.

வ. சு. சண்முகம் பிள்ளை,
292, லிங்க செட்டித் தெரு,
சென்னை : MADRAS.